# உடரட்ட அபிவிருத்தி அதிகாரசபை

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இலங்கை உடரட்ட அபிவிருத்தி அதிகாரசபை 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய கணக்குப் பதிவேடுகளை முறையாகப் பேணியிருந்தது எனவும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக்கூற்றுக்களில் விளையும் தாக்கத்தைத் தவிர 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை உடரட்ட அபிவிருத்தி அதிகாரசபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் இலங்கை கணக்கீட்டுக் நியமங்களுக்கு இணங்க நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) ரூபா 15 மில்லியன் தொகையான நிதிஏற்பாட்டை எதிர்பார்த்து ஆரம்பிக்கப்பட்ட நாரங்கஸ்பிடிய வீவல பாலத்தின் நிர்மாணத்திற்குரிய எவ்வித அபிவிருத்திச் செலவும் ஆண்டின் போது மேற்கொள்ளப்படாதிருந்தும் மொத்த நிதிஏற்பாட்டினையும் அபிவிருத்தி செலவினத்திற்கு வரவு வைத்த காரணத்தால் ஆண்டின் மிகை அப்பெறுமானத்தால் குறைத்தும் எதிர்பார்க்கப்பட்ட நிதிய மீதி கிடைக்க வேண்டிய நிதியமாக காண்பிக்கப்பட்டதன் காரணமாக நடைமுறைச் சொத்துக்கள் அப்பெறுமானத்தால் கூடுதலாகவும் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ii) 2006 ஆம் ஆண்டில் தேசத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சிடமிருந்து கிடைக்கப் பெற்ற HF 4023 ஆம் இலக்க ஜீப் வண்டியின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன், அதன் திருத்த நடவடிக்கைளுக்காக ஏற்பட்ட ரூபா 687.442 செலவினம் மட்டும் மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(iii) மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து சேவை அதிகாரசபைக்குரிய காணியொன்றை 05 ஆண்டுகளில் மீளஒப்படைக்கும் இணக்கப்பாட்டு உடன்படிக்கையொன்றின் அடிப்படையில் ரூபா 14,924,043 செலவு செய்யப்பட்டு அதிகாரசபையால் கடுகண்ணாவ வியாபார கட்டிடத்தொகுதி நிர்மாணிக்கப்பட்டிருந்தது. வெளித் தரப்பு காணியொன்றில் நிர்மாணிக்கப் பட்டிருந்த இக்கட்டிடத்தை அதிகார சபையிடமுள்ள நிலையான சொத்தொன்றாக கருதி கணக்கீடு செய்தமையால் நிலையான சொத்துக்களின் பெறுமதி அப்பெறுமானத்தால் கூடுதலாக காண்பிக்கப்பட்டதுடன், அது தொடர்பாக ஆண்டிற்ககான பெறுமானத்தேய்வுப் பெறுமதியினை ரூபா 673,447 ஆல் சீராக்கியமையால் நிலையான சொத்துக்கள் மற்றும் அரச மானியங்கள் என்பன அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2.2. இணங்காமைகள்

05 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 88,441,173 ஆக இருந்ததுடன், துணைப் பதிவேடுகளின் பிரகாரம் அத்தகைய கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 88,929,924 ஆனமையால் வித்தியாசம் ரூபா 488,751 ஆக இருந்தது.

### 1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (i) சட்டம்<br>2010 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 142(1) மற்றும் 154 ஆம் பிரிவு | முன்னைய ஆண்டில் 02 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 55,300 தொகையான நிறுத்தி வைக்கப்பட வேண்டிய வரி அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பியிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | 2006 ஆம் ஆண்டின் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.1 மற்றும் 5.6 ஆம் பிரிவுகள் | விதந்துரைப்புக்கள் தயாரிக்கப்படாமலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொறியியலாளரின் மதிப்பீடு ஒன்று இல்லாமலும் 32 – 5451 ஆம் இலக்க வாகனத்திற்காக கராஜ் உரிமையாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் 03 சந்தர்ப்பங்களில் ரூபா 765,531 தொகை செலவிடப்பட்டு திருத்தியமைக்கப்பட்டிருந்தது. இதில் ஒரு சந்தர்ப்பத்தில் ரூபா 322,000 திருத்த மதிப்பீடொன்றிற்காக ரூபா 225,000 அதாவது மதிப்பீட்டு பெறுமதியில் 70% முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. |
| (iii) | நி.பி. 212(2) | சம்பள முற்பணக் கொடுப்பனவின் போது உத்தியோகத்தரின் சம்பளத்தில் 40% எல்லை வரை மட்டுமே சம்பள முற்பணம் வழங்க முடியுமாக இருந்த போதிலும், இரண்டு உத்தியோகத்தர்கள் தொடர்பாக மேற் கொள்ளப்பட்ட தெரிவுப் பிரசோதனையின் போது 51% முதல் 68% வரையான சம்பள முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

#### நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான அதிகாரசபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து ரூபா 7,561,888 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 7,678,644 ஆனமையால் மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா 116,756 ஆல் வீழ்ச்சி ஒன்றைச் சுட்டிக்காட்டியது.

## 2.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர் ஒருவர் 2008 யூன் முதல் திசெம்பர் வரையான காலப்பகுதியில் அதிகாரசபையிலும் வேறு அரசாங்க நிறுவனமொன்றிலும் முழுநேர பதவிகள் இரண்டில் சேவையில் ஈடுபட்டு அதிகாரசபையிலிருந்து ரூபா 327,551 படிகளைப் பெற்றுக்கொண்டிருந்தார்.

(ஆ) உடன்படிக்கை பெறுமதி ரூபா 326,793 தொகையான ஹத்தரலியத்த பிரதேச செயலகப் பிரிவின் பலேன பாலத்திலிருந்து தெஹிதெனிய மடிகே வரையான வீதிக்கு கொங்கிரீட் இடுவதற்காக ஹத்தரலியத்த பிரதேச சபைக்கு ரூபா 65,359 தொகை முற்பணமாக செலுத்தப்பட்டிருந்த போதிலும், மேற்குறித்த வீதிக்குப் பதிலாக பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்படாத வீடுகளுக்கு மட்டும் செல்லும் தனியார் வீதியொன்று நிர்மாணிக்கப்பட்டு அதற்காக அங்கீகரிக்கப்பட்ட வீதியின் பெயரை தவறாகப் பயன்படுத்தி பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. செலுத்தப்பட்ட முற்பணம் 2011 யூலை வரையில் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

(அ) அதிகாரசபை மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகம் என்பவற்றிற்கிடையே 2008 ஆம் ஆண்டில் ஏற்படுத்திக் கொண்ட இணக்கப்பாட்டு உடன்படிக்கையின் பிரகாரம் பல்கலைக்கழக வளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பால் விற்பனைக் கட்டிடம், அதற்குரிய உடன்படிக்கையின் 4 மற்றும் 5 ஆம் பிரிவுகளை மீறியமையால் பல்கலைக்கழகத்திற்கு மீள ஒப்படைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக கட்டிடத்தை அமைப்பதற்காக அதிகார சபையால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 976,890 செலவினமும் அதிகாரசபையால் பால் விற்பனை நிலையத்திற்கு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 71,400 பெறுமதியான உபகரணங்களுக்காக ஏற்பட்ட செலவினமுமாக மொத்தம் ரூபா 1,048,290 பெறுமதியான நிதிசார் நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) கடுகண்ணாவ வியாபார கடைத் தொகுதியின் 09 மற்றும் 10 ஆம் இலக்க கடைகளை பாவனைக்கு எடுப்பதற்காக 2008 திசெம்பர் வரையில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், 2009 சனவரி முதல் 2010 திசெம்பர் மாதம் வரையில் அக்கடைகள் மூடப்பட்டிருந்ததுடன், ஆகக்குறைந்த வாடகையை கருத்திற் கொள்ளும் போது அக்காலப்பகுதிக்காக ரூபா 124,800 வாடகை வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

## 2.4 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2010 ஆம் ஆண்டின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஏற்பாட்டை எதிர்பார்த்து ஆரம்பிக்கப்பட்டிருந்த நாரங்கஸ்பிட்டிய வீவல பாலத்தின் நிர்மாண வேலைகள் நேர் உழைப்பு அடிப்படையில் நிர்மாணிக்கும் பொருட்டு எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் ரூபா 801,925 செலவினை மேற்கொண்டு சீமேந்து, கற்கள், மணல் மற்றும் சுருள் இரும்புக் கம்பி என்பன கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. பின்னர் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி இந்நிர்மாணத்தை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளும் பொருட்டு கொள்வனவு வழிகாட்டிக்கோவையின் 3.9.4 ஆம் பிரிவிற்கு முரணாக அங்கீகரிக்கப்பட்ட சங்கமொன்றிற்காக ரூபா 2 மில்லியன் எல்லையை மிகைத்து ரூபா 11,679,426 தொகைக்கு விஹாரை செயலாற்றல் சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 583,971 முற்பணத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும் நிர்மாண வேலைகள் 02 மாதங்களுக்கு அதிகமான காலம் தாமதித்திருந்தமை காரணமாக கொள்வனவு செய்யப்பட்டிருந்த 67 சீமேந்து மூடைகளைப், பாவிக்கப்பட முடியாமையால் அதற்காக ஏற்பட்ட ரூபா 47,570 செலவினம் பயனற்ற செலவினமாக மாறிஇருந்தது.

(ஆ) 2008 - 2010 காலப்பகுதியில் ரூபா 4,106,053 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த தம்பான நீர் விநியோகத்திட்டத்தின் நோக்கத்திற்குட்பட்ட செயற்பாடான பழங்குடி மக்களுக்கு நீரினை வழங்கும் நோக்கம் 2011 யூன் வரையில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) 2008 மக நெகும செயற்திட்டத்தின் கீழ் பூஜாப்பிட்டிய பிரதேச சபை அதிகாரத்திற்குட்பட்ட மாரத்துகொடை மெத்தபிட்டிய வீதி அபிவிருத்தி செய்தல் நிர்மாணம் தொடர்பாக 2009 திசெம்பர் 29 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம் அதிகாரசபையால் ரூபா 300,783 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அத்தினத்தில் ரூபா 56,210 பெறுமதியான 3/4, 2'' மற்றும் 4'' அளவிலான துண்டுக் கல் மட்டும் வீதியில் குவிக்கப்பட்டிருந்தது. 2011 மே மாதம் வரையில் இந்நிர்மாணத்திற்காக ரூபா 292,616 ஆன பட்டியல் ஒன்று பிரதேச சபையால் அதிகாரசபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், வீதி பழுதடைந்திருந்தமை, வழங்கப்பட்ட முற்பணத்திற்கு போதியளவில் வேலை நிறைவேற்றப்படாதிருந்தமை என்பன காரணமாக ரூபா 135,455 தொகையினை அதிகாரசபையால் அறவிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்ட காரணத்தால் மேற்குறித்த வீதி உடன்படிக்கையின் பிரகாரம் அபிவிருத்தி செய்யப்படவில்லை என்பதுவும் கொடுப்பனவு செய்யப்பட்ட பணம் பயனற்ற செலவினமாக இருந்ததமையும் அவதானிக்கப்பட்டது.

(ஈ) ரூபா 341,000 மதிப்பீட்டுப் பெறுமதியில் பூஜாப்பிட்டிய நவகினிகத் எல பாலத்தின் நிர்மாண வேலைக்காக 2010 நவம்பர் 08 ஆம் திகதி ரூபா 68,875 ஆன வேலை ஆரம்பிப்பு முற்பணத் தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. 2010 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் இந்நிர்மாண வேலை ஆரம்பிக்கப்படாதிருந்தும், செலுத்தப்பட்ட முற்பணத் தொகையை 2011 யூலை மாதம் வரையில் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.5 செயற்பாட்டு வினைத்திறனின்மை

நேர் உழைப்பு கிரய அடிப்படையில் நிர்மாண வேலைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த கொங்கிரீட் கலவை இயந்திரத்தை எதிர்காலத் தேவைப்பாடொன்று இல்லையென எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது ரூபா 351,495 இற்கு விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டிலே நேர் உழைப்பு கிரயத்தின் கீழ் இரண்டு நிர்மாண வேலைகளுக்காக கொங்கிரீட் கலவை இயந்திரத்தை வாடகைக்கு பெற்றுக்கொண்டமையால் ரூபா 129,400 தொகை செலவிடப்பட்டிருந்தது. இயந்திரம் பாவிக்க முடியாத நிலையில் காணப்பட்ட மையாலேயே விற்பனை செய்யப்பட்டதென தலைவர் அறிவித்திருந்தார்.

## 2.6 முகாமைத்துவ செயற்திறனின்மை

கடுகண்ணாவ வியாபாரக் கடைத் தொகுதியின் 12 ஆம் இலக்க கடை முறையற்ற விதத்தில் தவறான நபரொருவருக்கு குத்தகைக்கு வழங்கியதன் காரணமாக 2009 ஆம் ஆண்டிலிருந்து அக்கடையிலிருந்து கிடைக்க வேண்டிய வாடகை வருமானம் ரூபா 69,600 தொகையும், குறித்த வைப்புத் தொகையில் நிலுவை ரூபா 51,500 தொகையும் அதிகாரசபைக்கு கிடைக்காமல் போயிருந்தது. இத்தொகையை அறவிடுவதற்கும் கடையை முறையாக புதிய குத்தகையாளருக்கு வழங்குவதற்கும் 2010 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 செயலாற்றல்

மீளாய்வாண்டில் 823 உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டங்களை நிறைவேற்றும் பொருட்டு அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 75,736,849 பெறுமதியான 217 செயற்திட்டங்களுக்காக வேலை ஆரம்பிப்பு முற்பணமாக ரூபா 12,222,926 தொகை ஒப்பந்தகாரர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், உடன்படிக்கையின் பிரகாரம் அந்நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.8 பாதீட்டுக் கட்டுப்பாடு

வரவு செலவு மதிப்பீடுகளுக்கும் உள்ளபடியான தரவுகளுக்குமிடையே 10 செலவின விடயங்களில் 25% முதல் 589% வரையான விலகல் அவதானிக்கப்பட்டமையால், பாதீடானது வினைத்திறனுள்ள முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது.

## 3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வுப் பரிசோதனையின் போது புலனாகிய முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது எனது அறிக்கையின் மூலம் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்களின்பால் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) செயற்திட்ட அமுலாக்கல்
(இ) வாகனக் கட்டுப்பாடு
(ஈ) சம்பள முற்பணக் கொடுப்பனவு
(உ) ஒப்பந்த நிர்வாகம்